[23rd October 1971

THIRU D. SANTOSHAM : Sir, the Prevention of Food Adulteration Act is being used effectively in the case of the regular shop keepers and big manufacturers and that is right. But more than the big manufacturers and regular shop keepers, it is the petty vendors who sell the common sweets in front of the schools, the most pernicious stuff which is most often adulterated with harmful stuff which will spoil the health of the pupils. May I know whether there is any scheme for Statewide drive against this kind of sale to school children by the petty vendors?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போதே பெரும்பாலான நகரசபைப் பகுதிகளில் அப்படிப்பட்ட விற்பனைகளைத் தடை செய்வதற்கான முறைகள் இருக்கின்றன. அதை நிர்வகிக்கிறவர்கள், நகரசபையில் பொறுப்பில் உள்ளவர்கள் அதைத் தடுப்பதற்கு எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறார்களோ அந்த அளவுக்குத்தான் அது நிறைவேற்றப்படும். பொதுவாகக் கிராமப் பகுதிகளில் இதை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது. நகரப் பகுதிகளில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படும்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சோடா, கலர் போன்ற பானங்கள் விற்கும் கடைகளில் பழ ரசம் என்ற பெயரால் போதை வஸ்துக்கள் விற்கப்படுவதாகத் தெரிகிறது. அதையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பழ ரசம் என்ற பெயரில் மது விற்கப்படுகிறது என்கிறார்கள். அது தடுக்கப்பட வேண்டும். ஒரு பொருள் எந்தப் பெயரில் விற்கப்படுகிறதோ அந்தப் பொருள்தான் விற்கப்படவேண்டும். அந்தப் பொருளின் பெயரில் வேறு பொருள்கள் விற்கப்படுகின்றன என்றால், அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

Aerial Spraying

* 20. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the aerial spraying operations in the State have been leased out to private parties and firms for the year 1970–71; and

(*b*) if so, the details thereof?

விமானம் மூலம் மருந்து தெளித்தல்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் விமானம் மூலம் மருந்து தெளிப்பது 1970–71 ஆண்டில் தனியாருக்கும், நிறுவனங்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

23rd October 1971]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) மேலவை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் தனியார்களுக்கு இந்தப் பணி ஒப்படைக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் பணி தனியார்களிடத்தில் 1970–71-ல் ஒப்படைக்கப்பட்டு ஹெலிகாப்டர் மூலமாகத் தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டணம் ஏக்கருக்கு ரூ. 9 எனவும் பிக்சட் ரேட் ரூ. 7 எனவும் விதித்து, அதற்கான டெண்டர்கள் வரவழைக்கப்பட்டு குறைந்த டெண்டருக்கு விடப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த மாதிரி விமானத்திலிருந்து பூச்சி மருந்து தெளிப்பதற்கு ஹெலிகாப்டர்கள் மத்திய அரசிலேயே வைத்திருக்கும்போது, அதை வரவழைக்காமல் தனியாரிடமிருந்து வரவழைக்க டெண்டர்கள் கேட்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது ? மத்திய அரசிடமிருந்து வாங்கியிருந்தால், கொடுக்கிற பணம் அரசிற்குப் போயிருக்கும், விவசாயிகளுக்கும் செலவு குறைந்திருக்கும். அதை வரவழைக்காத காரணம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது சம்பந்தமாக மத்திய அரசிற்கு எழுதினோம். தற்சமயம் தாங்கள் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்ட காரணத்தால், அந்த ஆண்டு வரவழைக்க முடியவில்லை. இந்த ஆண்டுகூட கிடைக்காவிட்டால், தமிழக அரசு ஐந்து விமானங்களை வாங்குவதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டிருக்கிறோம். இன்னும் அனுமதி வந்து சேரவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : நம்முடைய விமானங்களை வாங்கினால், அதை ஓட்டுபவர்களுக்கு ரூ. 5,000 மாதத்திற்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். சில மாதங்களில்தான் பூச்சி மருந்து அடிக்கும் வேலையிருக்கும். ஆண்டு பூராவும் விமானங்களை வைத்துக் காக்க வேண்டியது அவசியமாகும். அப்படி வைத்துக் கொண்டால், அது லாபகரமாக இருக்குமா என்பதை அரசு ஆராய்ந்ததா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்தில் ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு 8 திங்களுக்கு பூச்சி மருந்து விமானம் மூலமாகத் தெளிக்கப்படுகிறது. ஆகவே மேலும் அதைத் தீவிரப்படுத்தத்தான் ஐந்து வாங்கலாம் என்று கேட்டோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனையை நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துச் சொல்லியதற்குப் பிறகுதான் ஐந்து ஹெலிகாப்டர்கள் மத்திய அரசில்

---

[a] Printed as Appendix I on page 151.

[23rd October 1971

வைத்திருப்பதை இங்கே நிறுத்தி வையுங்கள், வேண்டும்போது அவற்றை எடுத்து உபயோகித்துக் கொள்கிறோம் என்று சொன்னதற்கு இந்த ஆண்டு கொடுப்பதற்கில்லை என்று சொல்லி விட்டார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : விமானம் மூலம் மருந்து தெளிப்பதன் மூலம் எல்லாப் பகுதிகளிலும் பயிர்களுக்கு ஏற்படுகிற பூச்சிகள் கொல்லப்படுவதால் நோய்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் அறிகிறோம். ஒரு பயிருக்கு, நெற் பயிருக்கு ஒரு முறைதான் தற்போது மருந்து தெளிக்கப்படுகிறது. பயிர் வெளிப்பட்டவுடன் ஒரு தடவையும் கதிர் ஆவதற்கு முன்பு ஒரு தடவையும் தெளித்தால் நல்லது என்று பயிர் விஞ்ஞானிகள் சொல்வதால் இரண்டு முறை நெற்பயிருக்கு விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கத்தக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இரண்டு முறை மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் விவசாயிகளே ஹாண்ட் ஸ்ப்ரே, பவர் ஸ்ப்ரே மூலமாக அவ்வப்போது பூச்சி மருந்து தெளித்துக் கொள்கிறார்கள். இப்போது விமானம் மூலமாகக் கூட இரண்டு முறை தெளிக்கப்படுகிறது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : விமானம் மூலமாக மருந்துகள் தெளிக்கப்படுவதற்கு முன்பாக சாகுபடி செய்கிற விவசாயிகளுடைய கருத்தையும் அறிந்து அவர்கள் சம்மதம் பெற்றுச் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இது முதலிலே ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அனுப்பப்பட்டு, ஒன்றியங்கள் தீர்மானம் செய்து, அனுப்பப்பட்ட பிறகு, அந்தக் குறிப்பிட்ட பகுதிகளில்தான் தெளிக்கப்படுகிறது. ஒரு யூனியனில் சில பஞ்சாயத்துக்கள் பெற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, அந்த ஊர் பஞ்சாயத்தில் இருக்கும் வயல்களில் தெளிக்காமல் இருந்தால், அடுத்த வயல்களுக்கும் அந்தப் பூச்சி பரவும் என்பதால் ஒன்றியங்கள் தீர்மானம் போடும் முறையை வைத்து அதைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

திரு. வி. வெங்கா : மேலை நாடுகளில் ஒரே காலத்தில் ஒரே பருவத்தில் அனைத்து நிலங்களிலும் பயிர் செய்யப்படுவதால் விமானம் மூலம் பூச்சி மருந்து அடிப்பது நியாயமாகப் படுகிறது. ஆனால் நம் நாட்டில் ஒவ்வொரு இடத்திற்கும் பருவ நிலையும் பயிர் செய்யும் முறையும் மாறுபட்டிருப்பதால், ஒரு பகுதியில் நாற்று நிலையிலும் ஒரு பகுதியில் அறுவடைக்குத் தகுந்த நிலையிலும் பயிர்கள் இருக்கும்போது, விமானம் மூலம் தெளிப்பது அவ்வளவு உபயோககரமானதாக இல்லை என்று கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் பேசிக்கொள்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டு அரசு மாற்று முறையைக் கையாளுமா ?

23rd October 1971]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கனவே அப்படி இருந்திருக்கலாம். சமீபத்தில் பல்வேறு மாவட்டங்களில் நான் நேரில் சென்று பார்த்தேன். சிலர்தான் பட்டம் தவறிப் பயிர் செய்கிறார்கள் என்றாலும், வேளாண்மை செய்கிறவர்கள் சம்பாவுக்குத் தனி, காருக்குத் தனி என்று பட்டங்கள் பிரித்து ஏறக்குறைய அந்தக் காலங்களில் தான் அந்தப் பகுதிகளில் பயிர் செய்கிறார்கள். அங்கத்தினர் சொல்கிற பகுதிகளையும் நான் நேரில் சென்று பார்த்தேன். அப்படிப்பட்ட பகுதிகளுக்கு ஒரே நேரத்தில் தெளிப்பதில்லை.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, the cost of aerial spraying per acre?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, ஒரு ஏக்கருக்கு மருந்துச் செலவு அன்னியில் ரூ. 11 ஆகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ. 15.20 வசூலிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அதே சமயத்தில் சாதாரண பம்ப் மூலம் தெளிப்பதற்கு ரூ. 6 வசூலிக்கப்படுகிறது என்பதால் அனுவசியமாக நிலச்சுவான்தார்கள் கூடுதலாக ரூ. 7 கொடுப்பது கஷ்டமாக இருப்பதாகப் புகார் விவசாயிகளிடமிருந்து அரசிற்கு வந்திருக்கிறதா? அந்தச் சங்கடத்தைத் தவிர்க்க அரசு ஏதாவது செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பூச்சி மருந்து ஹெலிகாப்டர்கள் மூலமாகத் தெளிப்பதில் செலவு கொஞ்சம் அதிகமாகிறது. பம்புகளின் மூலம் தெளிப்பதில் செலவு குறைவாகிறது. விமானம் மூலம் தெளிப்பதற்கு அதிகம் செலவாகிறது என்றால், அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் எந்த மருந்தைக் கேட்கிறார்களோ, அந்த மருந்துகளைப் பொறுத்த வரையில், கொஞ்சம் கூடுதலாக இருக்குமே தவிர, வேறு வகையில் இருப்பதற்கு நியாயமில்லை.

*21. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the cost of aerial spraying of insecticides is being sought to be collected from landholders who have leased out their lands; and

(*b*) if so, the provision under which the above charges are proposed to be collected?

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தங்கள் நிலங்களை குத்தகைக்கு விட்டுள்ள நில உடைமையாளர்களிடமிருந்து பூச்சிக் கொல்லி மருந்துகளை விமானத்திலிருந்து தூவுவதற்கான செலவு வசூலிக்கப்பட வேண்டுமென்று கோரப்படுகிறதா?